# குறுந்தொகையில் களவிற்குரிய கிளவிகள்

# Phraseology of Lover Affairs in *Kurunthogai*

***முனைவர் மு. செல்வக்குமார்***
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி, மதுரை, இந்தியா

**Dr. M. Selvakumar**
*Assistant Professor*
*Department of Tamil*
*Thiagarajar College, Madurai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*சங்க இலக்கியப் பாடல்களில் ஒருவரே கூற்று நிகழ்த்துகிறார் அல்லது பேசுகிறார். அவர் வாய்ச்சொல்வழி அவர் யாரிடம், எதற்காகப் பேசுகின்றார் என்பன உய்த்துணரப்படுகின்றன. இவ்வகையில் பார்த்தால் தமிழ் அகப்பாடல்கள் உலக இலக்கியத்தில் தனித்தன்மை பெற்று திகழ்கின்றன. குறுகிய அடிவரையறையே உள்ளதால் முதற்பொருள், கருப்பொருள் ஆகியவை பற்றிய வருணனைகள் ஏனைய நற்றிணை, அகநானூற்றில் போல இதில் விரிவாக இடம் பெறவில்லை. ஆயினும் தலைவன், தலைவி கூற்றுகள் மிகவும் நேர்த்தியாக இடம் பெற்றுள்ளன. தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கத்தில் களவிற்குரிய கிளவித்தொகைகள் காணப்படுகின்றன. அக்கிளவித் தொகையானது குறுந்தொகையில் இடம்பெறும் பாங்கினை இக்கட்டுரை ஆராய்கிறது.*

***திறவுச்சொற்கள்:***
*குறுந்தொகை, களவு, கிளவித்தொகை, வன்புறை, பாங்கன் பாங்கியர்*

## Abstract

*In Sanga literature only one person makes the statement or speaks. Through his words, we understand who he is talking to and why. If you look at it in this way, Tamil inner poems are unique in world literature. As there is a narrow syntax in the poems, the comments about the main theme are not included in detail like in other narratives like Natrinai and Akananuru. However, both the male and female protagonist statements are very neatly placed. Tolkappiyam describes the love poems between male and female protagonist. This article explores the love poems in Kurunthogai.*

***Keywords:***
*Kurunthogai, Kalavu, Vanpurai, Kilaviththogai, Paankan Paankiyar*

**Citation**

Selvakumar, M. “Phraseology of Lover Affairs in Kurunthogai.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 57–66.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20095565*

**முன்னுரை**

*“நல்லகுறுந்தொகை” எனப் புலவர்களால் பாராட்டிச் சொல்லப்பட்ட இந்நூல், குறும்பாடல்களைக் கொண்ட தொகை அல்லது தொகுப்பு என்று பொருள்படும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனப்படும் சங்க இலக்கியத்தில் இது எட்டுத்தொகையுள் ஒன்று. எட்டு'த்தொகை அனைத்தும் பலர் பாடிய பாடல்களின் தொகுப்பு ஆகும். சங்ககாலக் காதற் கவிதைகள் உளவியற் பாடல்கள் ஆகும். ஆண் பெண் உளவியலை அடிப்படையாக வைத்துப் போற்றிப் புலவர்கள் பாடியுள்ளனர். அவ்வகையில் தலைவனும், தலைவியும் பிறர் அறியாமல் மேற்கொள்கின்ற அன்பு வாழ்வை விளக்குவது களவு எனப்படும். முற்பிறவியில் செய்த நல்வினையின் காரணமாகத் தலைவியைத் தலைவன் காண்பான். பின்னர்த் தலைவன் தலைவியை இயற்கை புணர்ச்சியால் அடைவான். அப்புணர்ச்சியால் பிறந்த காதல் வாழ்க்கை பிறருக்குத் தெரியாமல் மறைக்கப்படுவதால் களவெனப் பெயர் பெற்றது. இது களவெனப் பொதுவாகக் கூறப்படினும் அறநெறியாகவே அமையும். இவ்வாறு குறுந்தொகையில் காணலாகும் கிளவிற்குரிய கிளவித்தொகை பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.*

**களவிற்குரிய கிளவித்தொகை**

*களவிற்குரிய கூற்றுகள் தொகுத்துக் கூறப்படுவதே கிளவித்தொகையாகும். இவை பதினேழாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் பல கூற்றுகளை உடையன.*

***“இயற்கைப்புணர்ச்சி வன்புறை தெளிவே***
***பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்***
***இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்***
***பாங்கிமதி உடம்பாடு பாங்கியிற் கூட்டம்***
***பாங்கமை பகற்குறி பகற்குறி இடையீடு***
***இரவுக்குறியே இரவுக்குறி இடையீடு***
***வரைவு வேட்கை வரைவு கடாதல்***
***ஒருவழித் தணத்தல் வரைவு இடைவைத்துப்***
***பொருள்வயிற் பிரிதல் என்று ஒரு பதின் ஏழும்***
***களவிற்குரிய கிளவித் தொகையே”***[1]

***(அகப்பொருள் விளக்கம் களவியல், நூ.எ.123)***

*என்ற நூற்பாவின் வாயிலாக களவிற்குரிய கிளவித்தொகையினை அறியமுடிகிறது.*

*தொல்காப்பியரோ, மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம், இயற்கைப் புணர்ச்சிக்கு உரிய திறன் மற்றும் களவிற் கூட்டத்துத் தலைவனுடைய செயல்பாடுகள் பற்றி சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறார். அகப்பொருள் விளக்கம் அவ்வாறு அல்லாமல் களவிற்கு உரிய கிளவித்தொகையினை விரிவாகவே எடுத்து இயம்புவதைக் காணலாம். களவிற்கு உரிய கிளவித் தொகையினை கூற்றுகளின் வாயிலாக, தலைவன், தலைவி, தோழி, தோழன் கூற்றுகளால் மட்டுமே அறியலாகிறது.*

**குறுந்தொகையில் இயற்கைப்புணர்ச்சி**

*சிந்தையால் வேறுபட்ட தலைவன், தெய்வம் கூட்டத், தலைவியைக் கண்டு கூடுவது இயற்கைப் புணர்ச்சியாகும். இயற்கைப் புணர்ச்சிகண் இடையீடுபட்டு நின்ற தலைமகன், தலைமகளின் நாணினை நீக்குதற் பொருட்டு மெய்தொட்டுப் பயிறல் முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்பு தோற்ற நலம் பாராட்டியது. தலைவன் தலைவியை முதன்முதல்*

*கூடுவது இயற்கைப் புணர்ச்சி. தலைவியது வெட்கத்தால் அது தடைபட்டு நின்றபோது அவள் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சத்தை நீக்கிக் கூடிமகிழ்ந்த தலைமகள் அவளது அழகைப் புனைந்து பாராட்டுவது,*

***"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி***
***காமம் செப்பாது கண்டது மொழிமோ***
***பயிலியது கெழீஇய நட்பின் மயில்இயல்***
***செறிஎயிற்று அரிவை கூந்தலின்***
***நறியவும் உளவோ நீ அறியும் பூவே"[2] (குறுந்தொகை, பா.எ.2)***

*இவ்வாறு முதன் முதல் தலைவியைக்கூடி ஐம்புல இன்பம் நுகர்ந்த தலைமகன் இவ்வாறு அவளைப் பலபடப் புணர்ந்து பாராட்டுவது இயல்பே ஆகும். இதுவும் ஒரு உளவியலாகும். இது தெய்வப் புணர்ச்சியின் ஒரு பகுதியான தலைவியின் அழகைத் தலைவன் பாராட்டல் ஆகும். "நலம் பாராட்டலும்" என்ற வரியின் மூலம் இஃது உணரப்படும்.*

**வன்புறை**

*இயற்கைப் புணர்ச்சியில் மகிழ்ந்த தலைவி, பிரியும் தலைவன் மீண்டும் வருவானோ என ஐயப்படுவாள். அவளின் ஐயத்தைப் போக்கத் தலைவன் மீண்டும் வருவேன் என வற்புறுத்திக் கூறுதல் வன்புறையாகும். வன்புறை என்பது உறுதிபடக் கூறுதல் ஆகும். வன்புறையின் விரி ஆறு வகையாகும். அவற்றுள் ஒன்றான தலைவியைப் பிரியேன் எனத் தலைவன் கூறுதலை குறுந்தொகையில் காணலாம்.*

***"யாயும் ஞாயும் யாரா கியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்?***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்?***
***செம்புலப் பெயல்நீர் போல***
***அன்புடை நெஞ்சம் தாம் கலந் தனவே"[3] (குறுந்தொகை, பா.எ.40)***

*என்ற பாடலானது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த பின்னர், பிரிவரெனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறியது. நிலத்தில் பெய்த நீர் உடனே நிறம், சுவை அனைத்தாலும் அந்நிலத்து இயல்பதாகிவிடும் என்பதனை,*

***"நிலத்து இயல்பால் நீர்திரிந்து அற்றாகும்"[4] (குறள்.452)***

*என்ற குறள்வரியின் வாயிலாக அறியலாம். அணிகலன்களைத் திருத்துதல், தலைவியின் மீது கொண்ட பெருங்காதலை விளக்குதல், இறைவனின் ஊழித் திறத்தை எடுத்துரைத்தல், தலைவியைப் பிரியேன் எனல், தலைவியின் ஐயத்தைப் போக்க ஊர் உள்ள இடம் கூறல், தலைவன் மீண்டும் வர உடன்படல் போன்றவை வன்புறையாகும்.*

**தெளிவு**

*தலைவனுடன் கூடி இன்பமுற்ற தலைவி, தலைவனின் சொல்லை மெய்யென ஏற்றுப் பிரிவதைப் பொறுத்துக் கொள்ளும் நிலையாகும்.*

***"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆரளவு இன்றே, சாரல்***
***கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"[5] (குறுந்தொகை, பா.எ.3)***

*என்ற பாடலானது தலைவி தலைவனின் பிரிவினைப் பொறுத்துக் கொள்ளலாகும்.*

*இக்கருத்தினை,*

***"நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்***
***என்றும் என்தோள் பிரிவறி யலரே"[6]*** ***(நற்றிணை, பா.எண.1;1-2)***

*என்ற வரிகளானது உணர்த்துவதை அறியலாம்.*

**பிரிவுழி மகிழ்ச்சி**

*புணர்ச்சியில் கூடிக் களித்த இடத்திலிருந்து பிரிந்து செல்லும் தலைமகளின் செலவைக் கண்டு தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுதல், தன்னைத் தேடி வந்த பாகனிடம் தலைவி செல்வதைக் காட்டிக் கூறுதல் என்ற இருவகை விரியினைக் கொண்டது.*

***"மால்வரை இழிதரும் தூவெள் அருவி***
***கல்முகைத் ததும்பும் பல்மலர்ச் சாரல்***
***சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்***
***நீர்ஓ ரன்ன சாயல்***
***தீஓ ரன்னஎன் உரன் அவித்தன்றே"[7]*** ***(குறுந்தொகை, பா.எ.95)***

*இஃது தலைமகன் பாங்கற்கு உணர்த்தலாகும்.*

**பிரிவுழிக் கலங்கல் மற்றும் இடந்தலைப்பாடு**

*தலைவி பிரிந்த இடத்தில் அதற்காகத் தலைவன் வருந்தும் நிலையே பிரிவுழிக் கலங்கலாகும். இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் புணர்ந்த தலைவன் அடுத்தநாளும் அவ்விடத்தில் அத்தலைவியைக் கூடுதல் இடந்தலைப்பாடு எனப்படும்.*

***"கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை***
***நாறுஇதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ***
***ஐதுதொடை மாண்ட கோதை போல்***
***நறிய நல்லோள் மேனி***
***முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே"[8]*** ***(குறுந்தொகை, பா.எ.62)***

*இப்பாடலானது அவள் மேனி அழகைப் புனைவதால், தலைவன் அவளுடன் கூடி மகிழ்ந்தபின் அவ் அனுபவத்தை நலம் பாராட்டிக் கூறியது. முன்பு கூடி இன்புற்றவன், பின்னும் கூட விரும்பும் நெஞ்சிற்கு இவ்வாறு சொல்லி மகிழ்கின்றான்.*

***"இல்லோன் இன்பம் காமுற் றாஅங்கு***
***அரிதுவேட் டனையால் நெஞ்சே - காதலி***
***நல்லள் ஆகுதல் அறிந்தாங்கு***
***அரியள் ஆகுதல் அறியா தோயே"[9]*** ***(குறுந்தொகை, பா.எ.120)***

*இஃது அல்ல குறிப்பிட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்கு சொல்லியது, இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிரிந்த வழிக் கலங்கியதுமாகும்.*

**பாங்கற், பாங்கியிற் கூட்டம்**

*பாங்கனின் உதவியால் தலைவன் தலைவியைக் கூடுதல், பாங்கியின் உதவியால் தலைவியைத் தலைவியும் கூடுதல் ஆகும். தலைவனும் தலைவியும் கூடி மகிழ்ந்ததைத் தோழி தன்னுடைய அறிவால் ஆராய்ந்து அறிந்து கொள்ளுதலே பாங்கிமதி உடன்பாடு ஆகும். அதாவது தலைவியிடம் வேறுபாடு கண்ட தோழி அவளுடைய சொல், செயல்களை ஆராய்ந்து உண்மையைத் தெளிதல். பின்னர்த் தலைவன் தலைவியரின் காதலுக்கு*

உடன்படுதலும் இதனுள் அடங்கும். சார்தல், கேட்டல், சாற்றல், எதிர்மறை, நேர்தல், கூடல், பாங்கிற் கூட்டல் என்ற ஏழும் பாங்கற் கூட்டத்தின் வகைகளாகும். அவற்றிற்கான விரி மொத்தம் இருபத்திநான்கு என கூறப்படுகிறது.

இரந்துபின் நிற்றல், சேட்படை, மடற்கூற்று மடல்விலக்கு, உடன்படல், மடற்கூற்று ஒழிதல், குறைநயப்பித்தல், நயத்தல், கூட்டல், கூடல், ஆயம்கூட்டல், வேட்டல் போன்றவை பாங்கியிற் கூட்டத்தின் வகைகளாகும்.

**"தோளும் கூந்தலும் பலபா ராட்டி**
**வாழ்தல் ஒல்லுமோ மற்றே செங்கோல்**
**குட்டுவன் தொண்டி அன்ன**
**எற்கண்டு நயந்துநீ நல்காக் காலே"[10]** **(ஐங்குறுநூறு, பா.எ.178)**

இப்பாடலானது தலைவன் தன் நிலையினை எடுத்துரைத்தலாகும். தலைவியின் குலமுறை முதலானவற்றைத் தோழி எடுத்துக்கூறும்போது இக்கூற்று நிகழும் என்பர்.

இவற்றுள் முக்கிய நிகழ்வான மடற்கூற்று, மடற்கூற்று ஒழிதல் போன்றவை இடம்பெற்றுள்ளன. தோழியின் உதவியால் தலைவி கிடைப்பாள் என நினைக்கிறான் தலைவன். தோழியால் அது கூடாமல் போகவே தலைவிக்காக மடல் ஏறுவேன் எனத் தலைவன் உறுதிபடக் கூறுதல், கருணை நிரம்பிய தலைவனுக்கு மடல் ஏறுதல் இயலாது எனக் கூறித் தலைவன் மடல் ஏறுதலைத் தோழி தடுப்பது ஆகும்.

அவ்வாறு மடல் ஏறுவேன் எனக்கூறிய தலைவனின் சொல்லைக்கேட்டு தோழி அவன் தந்த கையுறையை ஏற்றுக் காதலுக்குத் துணை புரிதல் இதனைக் கண்ட தலைவன் தோழி தனக்காக மனம் இரங்கிக் கையுறையை ஏற்றுக் கொண்டதால் மகிழ்ந்த தலைவன் மடல் ஏறுவதைக் கைவிடுகிறான்.

**"காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம்**
**மடல் அல்லது இல்லை வலி"[11]** **(குறள்.எண் 1131)**

தலைவியைத் தோழியின் வாயிலாக அடைய முயன்ற தலைவன் மடலே பொருளென மதித்தலாகும் என்ற கருத்தை விளக்குகிறது.

**"மாஎன மடலும் ஊர்ப பூஎனக்**
**குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப**
**மறுகின் ஆர்க்கவும் படுப**
**பிறிதும் ஆகுப காமம்காழ்க் கொளினே"[12]** **(குறுந்தொகை, பா.எ.17)**

**"தொடலைக் குறுந்தொடி தந்தான் மடலொடு**
**மாலை உழக்கும் துயர்"[12]** **(குறள். எண் 1135)**

என்ற பாடல்களின் வாயிலாக அறியலாம்.

மேலும் மடல் ஏறுவேன் எனக் கூறிய தலைவனிடமிருந்து தோழி கையுறையை ஏற்றுக் கொண்டாள். பின்னர்த் தலைவனது குறையை முடிப்பதற்குத் தலைவியை உடன்படச் செய்வதே 'குறைநயப்பித்தல்' ஆகும். 'தலைவியை முனிதல்' என்ற நிலையில் கீழ்க்காணும் பாடலைக் காணலாம்.

**மாயோன் அன்ன மால்வரைக் கவாஅன்**
**வாலியோன் அன்ன வயங்குவெள் அருவி**
**அம்மலைக் கிழவோன் நின்நயந்து என்றும்**
**வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேறாய்**
**நீயும் கண்டு நுமரொடும் எண்ணி**

*அறிவறிந்து அளவல் வேண்டும் மறுதாற்கு*
*அரிய வாழி தோழி பெரியோர்*
*நாடி நட்பின் அல்லது*
*நட்டுநா பார்தம் ஒட்டியோர் திறத்தே"[14] (நற்றிணை, பா.எ.32)*
*"'தலைவி பாங்கி தன்னை முனிதலுக்கு' குறுந்தொகையில்*
*விட்டகுதிரை விசைப்பின் அன்ன*
*விசும்புதோய் பசுங்கழைக் குன்றநாடன்*
*யாம்தற் படர்ந்தமை அறியான் தானும்*
*வேனில் ஆனேறு போலச்*
*சாயினன் என்பநம் மாநலம் நயந்தே"[15] (குறுந்தொகை, பா.எ.74)*

*மேலும் தலைவனின் மனக்குறையைப் போக்கத் தலைவி உடன்படுகிறாள். அதனை ஏற்ற தோழி அத்தலைவியைத் தலைவன் கூடுமாறு குறியிடத்துக்கு அனுப்புவாள். இதுவே கூட்டல் ஆகும். தோழியால் அனுப்பப்பட்ட தலைவி குறியிடத்தில் தலைவனோடு கூடுதலே கூடல் எனப்படும். இக்கருத்துகளும் குறுந்தொகையில் காணலாகிறது.*

**பகற்குறி இரவுக்குறி**

*பகற்பொழுதில் தலைவன் தலைவியைக் காண்பதற்காகக் குறிக்கப்படும் இடம் பகற்குறியாகும். பகற்குறியின் வகை நான்கு, விரி பன்னிரண்டு ஆகும். இரவுப்பொழுதில் தலைவன் தலைவியைக் காண்பதற்காகக் குறிக்கப்படும் இடம் இரவுக்குறி ஆகும். இது பகற்குறியின் தொடர்ச்சியாகும். இரவுக்குறியின் வகை ஒன்பதும் விரி இருப்பத்தேழும் ஆகும்.*
*தலைவன் தலைவி வாழ்கின்ற ஊரினை நோக்கி மதிமயங்கிக் கூறுதலை,*

**"ஆடமை புரையும் வனப்பின் பணைத்தோள்**
**பேரமர்க் கண்ணி இருந்த ஊரே**
**நெடுஞ்சேன் ஆரிடை அதுவே நெஞ்சே**
**ஈரம்பட்ட செவ்விப் பைம்புனத்து**
**ஓர்ஏர் உழவன் போலப்**
**பெருவிதும் புற்றால் நோகோ யானே"[16] (குறுந்தொகை, பா.எ.131)**

*என்ற பாடலின் வாயிலாக அறியலாம்.*

*தலைவிமீது தலைவன் கொண்ட விருப்பத்தைத் தோழி தலைவியிடம் எடுத்துக் கூறுதல், தலைவன் வரும் வழியில் அவனுக்கு ஏற்படும் இடையூறுகளை எண்ணித் தலைவி வருந்துதலை குறுந்தொகை எடுத்துரைப்பதை,*

*"ஒளிவள் அருவி ஓங்கு மலைநாடன்*
*சிறுகட் பெருங்களிறு வயப்புலி தாக்கித்"[17] (குறுந்தொகை, பா.எ.88; 1-2)*
*"பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே*
*நீர்பரந்து ஒழுகலின் நிலம்கா ணலையே"[18] (குறுந்தொகை, பா.எ.355;1-2)*

*என்ற பாடல்களின் வாயிலாக அறியமுடிகிறது.*

**இரவுக்குறி இடையீடும் அல்லகுறியும்**

*இரவுக்குறியின் கண் தலைவியைக் காணவரும் தலைவனுக்கு அச்செயல் தடைபட்டுப் போதல் இரவுக்குறி இடையீடு எனக் கூறப்படும்.*

*தலைவியைக் காண வரும் தலைவன் குறியிடத்திற்கு வந்தவுடன் பறவைகளை ஒலியிடச் செய்தல், நீரில் கல் எறிந்து ஓசை எழச் செய்தல் ஆகிய இரண்டாலும் தன் வரவைத் தலைவிக்கு உணர்த்துவான். இச்செயல்கள் தலைவன் நிகழ்த்தாமல் தாமாக நடைபெறுவதும் உண்டு. அந்த நேரத்தில் தலைவன் வந்துவிட்டதாக எண்ணிக் குறியிடத்திற்குத் தலைவி வந்து திரும்பிச் செல்லுதலே அல்லகுறியாகும். அதன் வகையானது பதினொன்று ஆகும். தான் குறிப்பிழைக்கவில்லை எனத் தலைவி வருந்திக் கூறுதலை,*

***"கொன்ஊர் துஞ்சினும் யாம் துஞ் சலமே***
***எம்மில் அயலது ஏழில் உம்பர்***
***மயிலடி இலைய மாக்குரல் நொச்சி***
***அணிமிகு மென்கொம்பு ஊழ்த்த***
***மணிமருள் பூவின் பாடுநனி கேட்டே"[19] (குறுந்தொகை, பா.எ.138)***

*என்ற பாடலின் வாயிலாக அறியலாம்.*

*தலைவன் இரவுக் குறிக்கண் வருவதற்கு இடையூறாக நிகழும் நிகழ்ச்சிகள் 'வருந்தொழிற்கு அருமை' எனப்படும். தாய்விழித்தல், நாய்கள் விழித்தல், ஊரில் உள்ளோர் விழித்தல், நகர் காப்போர் ஊரைச் சுற்றுதல், நிலவு வெளிச்சம், கூகை அலறுதல், கோழி கூவுதல் போன்றவை தலைவன் வருவதற்கு அருமைப்பாட்டை ஏற்படுத்துவனவாகும்.*

**வரைதல் வேட்கையும், வரைவு கடாதலும்**

*அல்லகுறியாலும் வருந்தொழிற்கு அருமையாலும் வருந்திய தலைவி, தலைவனை மணந்து கொள்ளும் விருப்பத்தினைக் கூறுதலே வரைதல் வேட்கையாகும். வகை மூன்றும் விரி பதினெட்டாகவும் கூறப்படுகிறது.*

*களவில் கூடும் தலைவனை விரைந்து வந்து தலைவியை மணந்து கொள்ள வேண்டும் எனத் தோழி வற்புறுத்துவது வரைவு கடாதலாகும். வகை நான்கும் விரி இருபதும் ஆகும். கனவில் தோன்றி நனவில் பொய்யாகத் துன்பம் தரும் தலைவனின் நிலையைத் தலைவி எடுத்துரைத்தலை*

***"கேட்டிசின் வாழி தோழி அல்கல்***
***பொய்வ லாளன் மெய்யுறன் மரீஇய***
***வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட ஏற்றுஎழுந்து***
***அமளி தைவந் தனனே குவளை***
***வண்டுபடு மலரில் சாஅய்த்***
***தமியேன் மன்ற அளியேன் யானே"[20] (குறுந்தொகை, பா.எ.30)***

*தலைவன் வரும் வழியில் ஏற்படும் இடையூற்றை எண்ணித் தலைவி வருந்துதலை*

***"குன்றக் கூகை குழறினும் முன்றில்***
***பலவின் இருஞ்சினைக் கலைபாய்ந்து உகளினும்***
***அஞ்சுமன் அளித்துஎன் நெஞ்சம் இனியே***
***ஆர்இருள் கங்குல அவர்வரின்***
***சாரல்நீள் இடைச் செலவா னாதே"[21] (குறுந்தொகை, பா.எ.153)***

*பாடல்களின் வழியாக அறியலாம். தலைவனும் தலைவியும் பிறர் அறியா வண்ணம் கூடி மகிழ்வதே களவாகும். இக்களவொழுக்கம் சிலருக்கும் பலருக்கும் தெரியவரும். சிலர் அறிவது "அம்பல்" என்றும் பலர் அறிவர் "அலர்" என்றும் கூறப்படும்.*

**ஒருவழித் தணத்தல்**

*களவுக் காலத்தில் தலைவன், தலைவியைப் பற்றி அலர் எழும். அது அடங்குவதற்காகத் தலைவன் சில நாட்கள் தலைவியைக் காண வராமல் ஊரில் இருப்பான். இச்சிறு பிரிவே ஒருவழித் தணத்தல் ஆகும். ஒருவழித்தணத்தல் வகை ஏழு, விரி பன்னிரண்டாகும்.*

***"அலர் யாங்கு ஒழிவ தோழி! பெருங்கடல்***
***புலவுநாறு அகன்துறை வலவன் தாங்கவும்***
***நில்லாது கழிந்த கல்லென் நெடுந்தேர்***
***யான்கண் டனனோ, இலனோ? பானாள்***
***ஓங்கல் வெண்மணல் தாழ்ந்த புன்னைத்***
***தாதுசேர் நிகர்மலர் கொய்யும்***
***ஆயம் எல்லாம் உடன்கண் டன்றே"[22] (குறுந்தொகை, பா.எ.311)***

*இஃது அலரஞ்சிய தலைமகள் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது ஆகும்.*

**வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிவு**

*களவுக் காலத்தில் தோழி தலைவனிடத்தில் தலைவியை வரைந்து கொள்ள வேண்டும் என விரைவுபடுத்துவாள். தலைவன் அதற்கு உடன்பட்டுப் பொருள் தேடுவதற்காகப் பிரியும் பிரிவே வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலாகும். வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் வகைகள் ஐந்தும், விரி இருபத்தொன்றும் ஆகும்.*

***"தலைவன் பிரிவில் தலைவி கொடுஞ்சொல் கூறுதலை,***
***எறும்பின் அளையில் குறும்பல் சுனைய***
***உலைக்கல் அன்ன பாறை ஏறிக்***
***கொடுவில் எயினர் பகழி மாய்க்கும்***
***கவலைத்து என்பஅவர் தேர்சென்ற வாறே***
***அதுமற்று அவலம் கொள்ளாது***
***நொதுமலர்க் கழறும் இவ்அழுங்கல் ஊரே"[23] (குறுந்தொகை, பா.எ.12)***

*என்ற பாடலின் வாயிலாக அறியலாம். தலைவனின் வரவுக்கு முன் வந்த மழைமேகத்தைப் பொய்யெனத் தோழி கூறுதல்.*

***"மடவாழி மஞ்ஞை மாயினம்***
***கால மாரி பெய்தன அதன்எதிர்***
***ஆலலும் ஆலின பிடவும் பூத்தன***
***கார்அன்று இகுளை தீர்கநின் படரே***
***கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்***
***புதுநீர் கொளீஇய வகுத்தரும்***
***நொதுமல் வானத்து முழங்குரல் கேட்டே"[24] (குறுந்தொகை, பா.எ.251)***

*என்ற பாடலின் வாயிலாக அறியலாம்.*

**முடிவுரை**

*சங்க இலக்கியத்திற்கு ஈடான கவிதைகள் உலகெங்கனும் இல்லை என்று கூறலாம். காதல் பற்றிய கவிதைகள் அனைத்து மொழியிலும் இருக்கின்றன. அத்தகைய காதல் கவிதைகளை ஒப்பிட்டுப் பார்த்தால்தான் சங்க கவிதைகளின் உயரிய தரம், திறம்,*

*நெறிமுறைகள், பண்பாடுகள், மரபுகள் புலனாகும். மக்களுக்காக மக்களையே மையப்பொருளாக வைத்துப் பாடப்பெற்ற பாடல்கள் சங்க இலக்கியம் ஆகும் என்ற உண்மை அறிந்து கொள்ளத்தக்கது. அகப்பாடல்கள் காதல் தன்னுணர்ச்சிப் பாடல்கள் அல்ல. மனிதகுலத்தின் பண்பாட்டைக் காதல் என்கிற பாடுபொருள் மூலம் நெறிப்படுத்தத் தோன்றியவை. சங்ககால மகளிரின் பெண்ணியத்தினைப் பெருமையைப் பறைசாற்றத் தோன்றியவை. மேலும் சங்ககாலக் காதற் கவிதைகள் உளவியல் பாடல்கள் ஆகும். ஆண் பெண் உளவியலை அடிப்படையாக வைத்துப் பாடியவை எனப் புலனாகிறது. இவ்வாறு குறுந்தொகையில் காணலாகும் களவியற் கூற்றுகள் பற்றிய செய்தியினையும் இவ்வாய்வின்வழி அறியலாகிறது.*

**துணைநின்ற நூல்கள்**


1. சுப்பிரமணியன். ச.வே., சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி-ஐ, 2010, பாரிமுனை, சென்னை-600108, தமிழ்நாடு, இந்தியா.
2. வையாபுரப்பிள்ளை. எஸ்., சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), 1940, பாரிநிலையம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
3. கருணாநிதி.ந., தொல்காப்பியம் மாணவர்க்கான எளிய உரை, 2002, குமார் அசோசியேட்ஸ், சென்னை-14, தமிழ்நாடு, இந்தியா.
4. பிரேமா.இரா., சங்கஇலக்கியங்கள் மூலமும் உரையும், 2009, வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா.
5. சக்திதாசன் சுப்பிரமணியன், (2008), குறுந்தொகை, (முதற்பதிப்பு), தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் பி.11.குல்மொகர் குடியிருப்பு, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-600017, தமிழ்நாடு, இந்தியா.
6. சுப்பிரமணியன்.ச.வே., (2013), தொல்காப்பியம்,(ஆறாம் பதிப்பு), மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை- -600108, தமிழ்நாடு, இந்தியா.
7. கலியாணசுந்தரனார்.வி., (1997), திருக்குறள் விரிவுரை, (முதற் பதிப்பு), பூம்புகார் பதிப்பகம், 63,பிரகாசம் சாலை, சென்னை-600108, தமிழ்நாடு, இந்தியா.
8. பசுபதி. ம.வே., (2010), செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், (முதற்பதிப்பு), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை. தமிழ்நாடு, இந்தியா.


## References


1. Subramanian. S.V., Sangha Literary Anthology and Explanation, Volume-I, 2010, Barimuna, Chennai-600108, Tamil Nadu, India.
2. Vaiyapurappillai. S., Sangha Literature (Patum Thogaiyum), 1940, Parinilayam, Chennai, Tamil Nadu, India.
3. Karunanidhi.N, Tolkappiyam A Simple Text for Students, 2002, Kumar Associates, Chennai-14, Tamil Nadu, India.
4. Prema. Ira., Source and Text of Sangha Literature, 2009, Varthamanan Publishing House, Thiagaraya Nagar, Chennai-600017, Tamil Nadu, India.
5. Sakhtidasan Subramanian,(2008), Kurunthogai, (First Edition), Tamil Man Foundation "Periyar Cottage" P.11.Kulmogar Residence, Chevaliye Sivasi Ganesan Road, Thyagarayar Nagar, Chennai-600017, Tamil Nadu, India.

6. Subramanian .S. V., (2013), Tolkappiyam, (Sixth Edition), Manivasakar Publishing House, 31, Singer Street, Barimuna, Chennai- -600108, Tamil Nadu, India.
7. Kalianasundharanar.V, (1997), Thirukkural Lectures, (First Edition), Bhoombukar Publishing House, 63, Prakasam Road, Chennai-600108, Tamil Nadu, India.
8. Pasupathi. M. V., (2010), Classical Tamil Grammatical Literature, (First Edition), Tamil University, Thanjavur. Tamil Nadu, India.